பிரசார்பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**15 09 2026** **TUESDAY** **6.30 PM**

## மாநிலச்செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

**1)** அனைத்துத் தரப்பினருக்கும் சேவையாற்றிவரும் இயக்கமாக ஆர் எஸ் எஸ் திகழ்கிறது என்று குடியரசு துணைத்தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன் கூறியுள்ளார்.

**2)** ஸ்ரீபெரும்புதூர் — ஒரகடம் தொழில் வழித்தடம், வாகன உற்பத்தி மற்றும் ஸ்மார்ட்ஃபோன் ஏற்றுமதிக்கான, உலகின் முக்கிய மையமாக உருவெடுத்துள்ளது என்று மத்திய நிதியமைச்சர் திருமதி திருமதி.நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

**3)** தமிழகத்தில் மின்சார தட்டுப்பாடு இல்லை என்று மாநில மின்துறை அமைச்சர் திரு நிர்மல் குமார் கூறியுள்ளார்.

**4)** வேலூர், திருப்பத்தூர், ராணிப்பேட்டை மாவட்டங்களின் ஓரிரு இடங்களில் அடுத்த 24 மணிநேரத்தில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

**5)** இந்தியா — ஆப்கானிஸ்தான் அணிகளுக்கு இடையேயான இரண்டாவது டுவென்டி — டுவென்டி கிரிக்கெட் போட்டி புதுதில்லியில் இன்று நடைபெறுகிறது.

--இனி விரிவான செய்திகள்---

<<<<<<>>>>>>

அனைத்துத் தரப்பினருக்கும் சேவையாற்றிவரும் இயக்கமாக ஆர் எஸ் எஸ் திகழ்கிறது என்று குடியரசு துணைத்தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று ஆர் எஸ் எஸ் இயக்கத்தின் நூற்றாண்டு கால சேவை குறித்து பிஜேபி மூத்த தலைவர் திருமதி தமிழிசை சௌந்தரராஜன் எழுதிய நூலை, அவர் வெளியிட்டு பேசினார்.

இந்நூலின் முதல் பிரதிகளை தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன், புதுச்சேரி அமைச்சர் திரு நமச்சிவாயம் ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.

ஆர் எஸ் எஸ் இயக்கத்தின் சேவைகள் குறித்து டாக்டர் தமிழிசை சௌந்தரராஜன் விரிவாகவும், தெளிவாகவும் இந்த புத்தகத்தில் எடுத்துக்கூறியிருப்பதாக திரு சி பி ராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

***(Sound Byte — சி பி ராதா — 45 Sec. )***

<<<<<<>>>>>>

உலக நாடுகள், பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ள போதிலும், இந்தியப் பொருளாதாரம், நிலையான வளர்ச்சியைப் பெற்று வருவதாக, மத்திய நிதியமைச்சர் திருமதி.நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.

சென்னையில், தனியார் பல்கலைகழக பட்டமளிப்பு விழாவில் பேசிய அவர், இளம் பட்டதாரிகள் எளிமையாக நடந்து கொள்வதோடு, சவால்களை பொறுமையாக எதிர்கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

மாணவர்கள், தேச நலனுக்கு முன்னுரிமை அளித்து, தத்தமது துறைகளில் முன்னோடியாக உருவெடுக்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஸ்ரீபெரும்புதூர் — ஒரகடம் தொழில் வழித்தடம், வாகன உற்பத்தி மற்றும் ஸ்மார்ட்ஃபோன் ஏற்றுமதிக்கான, உலகின் மிக முக்கிய மையமாக உருவெடுத்துள்ளது என்றும் திருமதி.நிர்மலா சீதாராமன் தெரிவித்தார்.

***(Sound Byte — நிர்லா - 43 Sec.)***

<<<<<<>>>>>>

தமிழ்நாடு அரசுக்கும், உலகின் முன்னணி நிறுவனங்களுக்கும் இடையே **15** ஆயிரத்து **300** கோடிக்கும் அதிகமான முதலீடுகளுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகியிருப்பதாக மாநில அரசு கூறியுள்ளது.

இதுதொடர்பாக, இன்று வெளியிடப்பட்டுள்ள அரசின் செய்திக்குறிப்பில், லண்டனில் முதலமைச்சர் திரு விஜய் முன்னிலையில் நேற்று கையெழுத்தான இந்த புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மூலம், **10**

ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்களுக்கு வேலைவாய்ப்புகள் கிடைக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வாகன உதிரிபாக உற்பத்தி, ஆராய்ச்சி மேம்பாடு, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, மின் கட்டமைப்பு உபகரணங்கள், உலகளாவிய திறன் மையங்கள் ஆகியவற்றை உள்ளடக்கி இந்த ஒப்பந்தங்கள் செய்யப்பட்டுள்ளதாகவும் அதில் கூறப்பட்டுள்ளது.

பிரிட்டன் மற்றும் ஐரோப்பிய நிறுவனங்களுடன் இந்த ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டிருப்பதாகவும், உலகின் பல பகுதிகளில் இந்த நிறுவனங்கள் சிறப்பாக செயல்பட்டு வருவதாகவும் அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட ஆலந்தூர், அடையாறு மண்டலங்களில் மேற்கொள்ளப்பட்டுவரும் வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து மாநில அமைச்சர் திரு தமிழன் பார்த்திபன் இன்று ஆய்வு செய்தார்.

சென்னை தலைமைச்செயலகத்தில் நடைபெற்ற இந்த ஆய்வுக்கூட்டத்தில், மழைநீர் வடிகால் பணிகளை விரைந்து முடித்திடவும், நீர்நிலைகள், கால்வாய்கள், மழைநீர் வடிகால்களை

தூய்மைப்படுத்தவும், தூர்வாரும் பணிகளை முழுமையாக மேற்கொள்ளவும் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

தாழ்வான பகுதிகளில் தேங்கும் மழைநீரை உடனுக்குடன் வெளியேற்றும் வகையில் மோட்டார் பம்புகளை தயாராக வைத்திருக்க வேண்டும் என்றும், நிவாரண முகாம்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள் மற்றும் உணவுப் பொருட்கள், தண்ணீர் ஆகியவற்றை உறுதி செய்ய வேண்டும் என்றும் திரு தமிழன் பார்த்திபன் அதிகாரிகளிடம் அறிவுறுத்தினார்.

<<<<<<>>>>>>

தமிழகத்தில் மின்சார தட்டுப்பாடு ஏதும் இல்லை என்று மாநில மின்துறை அமைச்சர் திரு நிர்மல் குமார் கூறியுள்ளார்.

சென்னையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், மின் தட்டுப்பாட்டை போக்க பொது தொகுப்பிலிருந்து ஆயிரத்து 500 மெகாவாட் மின்சாரம் பெறப்பட்டதை சுட்டிக்காட்டினார்.

காற்றாலை மின்சார உற்பத்தி குறைந்ததால்தான் தட்டுப்பாடு ஏற்பட்டதாகவும், மின்தடையை போக்க அரசு தொடர்ந்து நடவடிக்கை மேற்கொண்டு வருவதாகவும் திரு நிர்மல் குமார் தெரிவித்தார்.

*(Sound Byte — நிரமல் குமார் 56 Sec.)*

<<<<<<>>>>>>

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தற்போது எந்த கூட்டணியிலும் இடம்பெறவில்லை என்று அக்கட்சியின் மாநிலச் செயலாளர் திரு சண்முகம் தெரிவித்துள்ளார்.

திருவள்ளூர் மாவட்டம் கும்மிடிப்பூண்டியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மதுராந்தகம், தாராபுரம் இடைத்தேர்தலில் தங்களது கட்சி இரட்டை நிலைப்பாடு ஏதும் எடுக்கவில்லை என்றும் குறிப்பிட்டார்.

தவெக அரசு மேற்கொள்ளும் அனைத்து முடிவுகளையும் ஆதரிக்க முடியாது என்றும் அவர் கூறினார்.

நில ஒருங்கிணைப்புச் சட்டம், புதிய பல்கலைக்கழக சட்டம் போன்றவற்றை மாநில அரசு திரும்பப் பெற வேண்டும் என்றும் திரு சண்முகம் வலியுறுத்தினார்.

<<<<<<>>>>>>

மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோவில் மகா கும்பாபிஷேகத்தை முன்னிட்டு, அம்மாவட்டத்தில் உள்ள கல்வி நிறுவனங்கள் மற்றும் அரசு அலுவலகங்களுக்கு நாளை மறுநாள் உள்ளூர் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனை ஈடுசெய்யும் விதமாக வரும் 26-ஆம் தேதி சனிக்கிழமை வேலை நாளாக இருக்கும் என்றும் மாவட்ட ஆட்சியர் திரு நிஷாந்த் கிருஷ்ணா தெரிவித்துள்ளார்.

எனினும், அவசர அலுவல்களை மேற்கொள்ள ஏதுவாக, அரசு கருவூலங்கள் மற்றும் வங்கிகள் குறிப்பிட்ட அளவு பணியாளர்களோடு செயல்படும் என்றும் அவர் கூறியுள்ளார்.

<<<<<<>>>>>>

வேலூர், திருப்பத்தூர், ராணிப்பேட்டை மாவட்டங்களின் ஓரிரு இடங்களில் அடுத்த 24 மணிநேரத்தில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையத்தின் தென் மண்டல இயக்குநர் டாக்டர் வி ஆர் துரை தெரிவித்துள்ளார்.

***(Sound Byte — வி ஆர் துரை - 16 Sec.)***

<<<<<<>>>>>>

*மாவட்டச் செய்திகள்*

கன்னியாகுமரி மாவட்டத்தில் அரசு பள்ளிகளில் பயிலும் மாணவியர்களுக்கு உயர்கல்வி பயில்வதற்கான வழிகாட்டி பயிற்சி முகாமினை ஆட்சியர் திரு பிரதாப் இன்று தொடங்கிவைத்தார்.

---------------

விருதுநகர் மாவட்டம் ஸ்ரீவில்லிபுத்தூரில் உள்ள அரசுப்பள்ளியில் காலை உணவுத்திட்ட விரிவாக்கப்பணிகள் குறித்து ஆட்சியர் திருமதி ஷரண்யா அரி இன்று ஆய்வு மேற்கொண்டார்.

-------------

நாமக்கல் மாவட்டம், புதுச்சத்திரம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில் 2 கோடியே 64 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டப்பணிகளை ஆட்சியர் திரு மதுபாலன் இன்று ஆய்வு செய்தார்.

---------------------

தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டியில், தீயணைப்புத்துறை சார்பில், தீ தடுப்பு மற்றும் அவசரகால முன்னெச்சரிக்கை குறித்த செயல்முறை ஒத்திகை நடத்தப்பட்டது.

-----------------

சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் கல்லூரி மாணவிகளிடம் விழிப்புணர்வு பதாகையில் ''போதைப்பொருள் இல்லா தமிழ்நாடு'' கையெழுத்து இயக்கத்தை ஆட்சியர் திருமதி மாலதி ஹெலன் இன்று தொடங்கிவைத்தார்.

<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

இந்தியா — ஆப்கானிஸ்தான் அணிகளுக்கு இடையேயான இரண்டாவது டுவென்டி — டுவென்டி கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

புதுதில்லியில் இப்போட்டி இரவு மணி 7.30-க்கு தொடங்குகிறது.

<<<<<<<**END**>>>>>>>